Tsi-7T

தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
தொகுத்தறி தேர்வு - செப்டம்பர் 2022

-----

# வகுப்பு 7

காலம்: 2.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 5×1=5

1) நெறி என்னும் சொல்லின் பொருள் ................
அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2) தமிழின் கிளைமொழிகளுள் ஒன்று ................
அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

3) வாழை கன்றை ................
அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது

4) யாண்டு என்னும் சொல்லின் பொருள் ................
அ) எமது ஆ) எங்கு இ) எவ்வளவு ஈ) எது

5) பாஞ்சாலங்குறிச்சியில் ................ நாயை விரட்டும்.
அ) முயல் ஆ) நரி இ) பரி ஈ) புலி

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5×1=5

6) வானில் ................ கூட்டம் திரண்டால் மழைபொழியும்.
7) நாவல் பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ................
8) வாய்மை எனப்படுவது ................
9) தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ................
10) முத்துராமலிங்கத்தேவர் இதழின் பெயர் ................

**இ) பொருத்துக:** 5×1=5

11) பொக்கிஷம் - முதற்போலி
12) சாஸ்தி - முற்றுப்போலி
13) மைஞ்சு - செல்வம்
14) அரையர் - மிகுதி
15) அஞ்சு - இடைப்போலி

**ஈ) கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க:** 4×2=8

16) தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.
17) தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாய் கவிஞர் கூறுவன யாவை?
18) சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?
19) யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?
20) தன் வயிற்றுக்கு தாய் எதனை உவமையாக கூறுகிறார்?
21) பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கைவளம் எத்தகையது?

**உ) பின்வரும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக:** 4+2=6

22) 'அருள்நெறி' எனத் தொடங்கும் எங்கள் தமிழ் பாடலை எழுதுக.
23) 'உள்ளத்தால்' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



ஊ) எவையேனும் இரண்டனுக்கு விடையளி: 2×2=4

24) குற்றியலுகரம் என்றால் என்ன?

25) ஔகாரக்குறுக்கம் என்றால் என்ன?

26) தகுதி வழக்கின் வகைகள் யாவை?

27) இறுதிப்போலி என்பது யாது? விளக்குக.

எ) ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: 3×3=9

28) தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாக கவிஞர் கூறுவன யாவை?

29) பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் நான்கினை எழுதுக.

30) காடு பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவது யாது?

31) தன் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

ஏ) கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக: 2×5=10

32) பொம்மலாட்டம் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.

(அல்லது)

வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

33) நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக:

முன்னுரை - மொழி பற்றிய விளக்கம் - தாய்மொழி - தாய்மொழிப்பற்று - தாய்மொழி பற்றுக் கொண்ட சான்றோர் - முடிவுரை.

ஐ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 4×2=8

34) தொகைச் சொற்களை விரித்து எழுதுக:

முக்கனி ...............

நாற்றிசை ...............

35) பிழையைத் திருத்தி எழுதுக:

பசு கன்றை ஈன்றன.

குழலி நடனம் ஆடியது.

36) கலைச்சொல் அறிவோம்:

Parable ...............

Political genius ...............

37) தமிழ் எண் கொண்டு நிரப்புக:

எனது வயது ...............

திருக்குறளில் ............... அதிகாரங்கள் உள்ளன.

- - - - - - - - - -

இ.சக்குமார். மு.
பிராம்மைட்டிக்கே.பி.ப,
வல்லம் 627809.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593